சார்பு நீதிமன்றம், சிவகங்கை

முன்னிலை. R.பாண்டி, பிஎஸ்.ஸி.,பி.எல்.,

சார்பு நீதிபதி, சிவகங்கை

2026-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 06-ம் நாள் திங்கள்கிழமை

இடைமனு எண்.3/2025

இன்

அசல் வழக்கு எண்.121/2025

....

தென்னரசு ....மனுதாரர்/1-ம்பிரதிவாதி

/எதிர்/

1) ஹரிஹரசுதன் .....1-ம் எதிர்மனுதாரர்/வாதி

2) உதவி பொறியாளர்,
தமிழ்நாடு மின்சார வாரியம்,
மறவமங்களம். ....2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதி

இம்மனுவானது என் முன்பாக இறுதி விசாரணைக்காக 10.03.2026-ம் தேதியன்று வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.S.ஜேம்ஸ்ராஜா அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.M.மோகனசுந்தரம் அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்குரைஞர் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வழக்குரைஞர்களின் வாதுரைகளைக் கேட்டும், மனுக்கோப்புகளை ஆய்வு செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும். . . .

**உத்தரவு**

தாவா வழக்கு காலவரம்பு தோஷத்தாலும், வழக்கு காரணமூலம் இன்றியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், 1ம் எதிர்மனுதாரர்/வாதி தாக்கல் செய்திருக்கும் தாவா அசல் வழக்கு எண்.121/2025 ஐ நீக்கறவு (Reject) செய்து உத்தரவிடக்கோரி மனுதாரர் தரப்பில் கட்டளை VII, விதி 11 (a) மற்றும் (d) -ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்.**

மனுதாரரின் தாத்தா கல்பொறக்கி மகன் சன்னாசி அவர்களுக்கு 1974-ம் ஆண்டு தமிழ்நாடு அரசு சர்வே எண்.62/3, 63/3, 64/1, 65/2 ல் 5 ஏக்கர் புஞ்சை நிலத்தை ஒப்படைப்பு செய்து வழங்கியது என்றும், மேற்படி இடத்தை சன்னாசி விவசாயம் செய்து அனுபவித்து வந்தார் என்றும், 30.12.1999-ம் ஆண்டு சன்னாசி இறந்த பின்பு சன்னாசியின் வாரிசுதாரர்கள் 25.10.2021-ல் மேற்படி 5 ஏக்கர் அசைன்மெண்ட் நிலத்தை மனுதாரருக்கு இனாம் செட்டில்மெண்ட் எழுதி கொடுத்தார்கள் என்றும் அதன் பேரில் பட்டா எண்.651 மனுதாரர் பெயருக்கு ஏற்பட்டு மனுதாரர் அனுபவித்து வந்தார் என்றும் தாவா வழக்கின் 2ம் பிரதிவாதியிடம் மேற்படி இடத்திற்கு மின் இணைப்பு கேட்டதில் மாண்பமை உயர்நீதிமன்ற Crl.OP (MD) SR. No.6895/2024 வழக்கை காட்டி மின் இணைப்பு கொடுத்திட 2ம் பிரதிவாதி மறுத்து விட்டார் என்றும் தாவா சொத்தை மனுதாரரிடமிருந்து அபகரித்திட வேண்டி சிவகங்கை மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரிடம் 07.05.2025-ல் கொடுக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் மேற்படி குற்ற சட்ட நடவடிக்கையில் தப்பிப்பதற்காக கோடைகால விடுமுறை நீதிமன்றத்தில் தாவா அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது என்றும், தாவா அசல் வழக்குரை அடிப்படையான ஆவணங்கள் எதுவும் தாவா சொத்திற்கு உரிமை பாத்தியம், அனுபவ பாத்தியம் வாதிக்கு உள்ளது என்பதற்கு ஆதரவாக தாக்கல் செய்திடாமலும் தாவா வழக்கு கால வரம்பு தோஷத்தாலும், வழக்கு காரண மூலம் அன்றியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் தாவா அசல் வழக்கை Reject செய்திட வேண்டி தாவா மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) 1-ம்எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்உரையின் சுருக்கம்-**

மனுவில் குறிப்பிட்டுள்ள பாரா 2 முதல் 6 வரையிலான சங்கதிகள் தவறானவை. சர்வே எண்.62/3-ல் 2.21 ஏக்கர், சர்வே எண்.63/3ல் 2 ஏக்கர், சர்வே எண்.64/1ல் 0.50 ஏக்கர் மற்றும் சர்வே எண்.65/2-ல் ஏக்கர் 2.21 மனுதாரரின் தாத்தா சன்னாசிக்கு அசைன்மெண்ட் மூலம் கொடுத்ததாக சொல்வது தவறு. தாவா "B" அட்டவணைச் சொத்து மனுதாரருக்கு 22.10.2021 ஆவணம் மூலம் பாத்தியப்பட்டது என்பதும் பட்டா எண்.651-ல் மனுதாரர் பெயருக்கு பட்டா உத்தரவு ஏற்பட்டது என்பதும் தவறு என்றும் அசைன்மெண்ட் மூலமாக ஒருவருக்கு 3 ஏக்கர் நிலம் மட்டுமே ஒப்படைப்பு செய்திட

முடியும் என்றும் மனுதாரர் தாத்தா சன்னாசிக்கு 10 ஏக்கர் நிலம் அசைன்மெண்ட் மூலமாக கொடுத்ததாக சொல்வது சட்ட முரணானது. 3 வருட காலத்திற்கு கொடுக்கப்படும் அசைன்மெண்ட் நிலமானது நிபந்தனை மீறப்பட்டால் மீண்டும் நிலமானது அரசால் எடுத்துக்கொள்ளப்படும். "B" அட்டவணை சொத்தில் மரம் வைத்து ஒருபோதும் அனுபவித்து வந்தது இல்லை. மனுதாரரும் 22.10.2021 Release ஆவணப்படியோ, 25.10.2021 இனாம் செட்டில்மெண்ட் ஆவணப்படியோ தாவா சொத்தை அனுபவித்தது கிடையாது. மேற்படி ஆவணங்கள் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டவை ஆகும். UDR திட்டத்தின்போது விசாரணையின்றி உட்பிரிவு செய்திடாமல் மனுதாரர் அவருக்குள்ள செல்வாக்கை பயன்படுத்தி பட்டா பெற்றுள்ளார். தாவா சொத்து பிராது வரைபடத்தில் குறிப்பிட்டபடி "A B C D" பகுதிக்குள் உள்ளது என்றும், "B" அட்டவணை சொத்து "E B C F" ஆகும். எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.4 வரையிலான ஆவணங்களின் மூலமாக தாவா சொத்தானது வாதிக்கு உரிமை பாத்தியம் உள்ளது என்றும், தாவா சொத்தில் கிணறு தோண்டி போர்வெல் அமைத்து மரங்கள் வளர்த்து சட்ட காலத்திற்கு மேலாக 1-ம் பிரதிவாதி நலனுக்கு எதிராக hostile ஆக கிருஷ்ணலீலாவதி அனுபவித்து வருகிறார். மேற்படி வாதியின் முன்பாத்தியஸ்தர்களை தொடர்ந்து 1ம் பிரதிவாதியின் நலனுக்கு எதிராக hostile ஆக சட்ட காலத்திற்கு மேலாக வாதி தாவா சொத்தை அனுபவித்து வருகிறார். 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா ஏற்பட்டதை சாதகமாக கொண்டு தாவா "B" அட்டவணை சொத்திற்கு பாத்திய உரிமையை வாதி கோருகிறார். தாவா சொத்தை சர்வே கட்டி அளந்தபோது தாவா "B" அட்டவணை சொத்து 1ம் பிரதிவாதி சொத்திற்குள் வருகிறது. தாவா "B" அட்டவணை சொத்தில் இருந்த போர்வேல், submersible pumb -ஐ 1ம் பிரதிவாதி கொள்ளை அடித்து சென்றுவிட்டார். "K" என்ற மின் இணைப்பை துண்டித்துவிட்டார். இதுகுறித்து மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த W.P.(MD) No.12608/2025 மனு உத்தரவின் பேரில் தாவா வழக்கு தாக்கல். தாவா வழக்கு சங்கதி சட்டப்படி தடை செய்யப்பட்ட ஒன்றல்ல. தாவா வழக்கின் பிரச்சனைக்கு முழுமையான விசாரணை மேற்கொண்டால் மட்டுமே முடிவு காண முடியும். வழக்கு விசாரணையை தவிர்க்கவே தாவா மனுவினை மனுதாரர் தாக்கல் செய்து வாதிக்கு தொந்தரவு கொடுக்கிறார். எனவே தாவா மனுவினை 1-ம் எதிர்மனுதாரர்/வாதியின் செலவுத்தொகை பேரில் தள்ளுபடி செய்திட வேண்டி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டியது யாதெனில் மனு அனுமதிக்கத் தக்கதா என்பதேயாகும்?

**5**. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. மனுதாரர் தரப்பில் சான்றாவணம் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. 1-ம் எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப் பட்டுள்ளது. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புகள் பார்வையிடப்பட்டன.

**6**. தாவா மனுவில் 1-ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு வாதம் புரியப்பட்டது. எ.ம.சா.ஆ.1, எ.ம.சா.ஆ.2 ஆவணங்கள் மூலமாக சர்வே எண்.63/2-ல் 3 ஏக்கர் 96 சென்ட், சர்வே எண்.62/2-ல் 1 ஏக்கர் 4 சென்ட் நிலத்தை கிருஷ்ண லீலா என்பவர் சுப்பிரமணியன் என்பவரிடம் 16.10.2006, 21.05.2007-ம் தேதிகளில் கிரைய ஆவணங்கள் மூலமாக கிரையம் பெற்றுள்ளார் என்பதை அறிய முடிகிறது. மேற்படி எ.ம.சா.ஆ.1, எ.ம.சா.ஆ.2 கிரைய ஆவணங்களில் தாவா "B" அட்டவணை சொத்தான சர்வே எண்.63/3, 62/3 ஏக்கர் 1.30 இடம் பெறவில்லை. 1ம் எதிர்மனுதாரர்/வாதி தனது பிராதிலும், எதிருரையிலும் எ.ம.சா.ஆ.1, எ.ம.சா.ஆ.2 ஆவணங்களில் தாவா "B" அட்டவணை சொத்தும் உள்ளடங்கியே கிரையம் பெறப்பட்டதாக சொல்லப்படும் நிலையில் எ.ம.சா.ஆ.1, எ.ம.சா.ஆ.2-ல் 1ம் எதிர்மனுதாரர்/வாதி குறிப்பிடுவது போன்று "B" அட்டவணை சொத்து உள்ளடங்கியதாக விபரம் இல்லை என்பதை மேற்படி ஆவணங்களை பரிசீலனை செய்கையில் அறிய முடிகிறது.

**7**) எ.ம.சா.ஆ.3 ஆவணத்தின் மூலமாக சர்வே எண். 63/2-ல் 3 ஏக்கர் 96 சென்ட், சர்வே எண்.62/2-ல் 1 ஏக்கர் 4 சென்ட் நிலத்தை பாஸ்கரன் என்பவருக்கு 14.12.2020-ம் தேதிய கிரைய பத்திரம் மூலமாக கிருஷ்ண லீலா கிரையம் கொடுத்துள்ளார். மேற்படி எ.ம.சா.ஆ.3-லும் தாவா "B" அட்டவணை சொத்து கிரைய சொத்து அல்ல என்பது மேற்படி ஆவணத்தை பரிசீலனை செய்கையில் அறிய முடிகிறது.

**8**) எ.ம.சா.ஆ.4 ஆவணத்தின் மூலமாக சர்வே எண். 63/2-ல் 3 ஏக்கர் 96 சென்ட், சர்வே எண்.62/3-ல் 1 ஏக்கர் 4 சென்ட் நிலத்தை தாவா வழக்கின் வாதி ஹரிஹரசுதன் என்பவர் 09.09.2021-ம் தேதியில் மேற்படி பாஸ்கரனிடமிருந்து கிரையம் பெற்றுள்ளார் என்பதும் மேற்படி ஆவணத்திலும் தாவா "B" அட்டவணை சொத்து கிரைய சொத்து அல்ல என்பதும் மேற்படி ஆவணத்தை பரிசீலனை செய்கையில் அறிய முடிகிறது. எ.ம.சா.ஆ.5, எ.ம.சா.ஆ.8 ஆவணங்களிலும் வாதியின் பெயருக்கு தாவா "A" அட்டவணை சொத்திற்கு மட்டுமே பட்டா மாறுதல் உத்தரவு ஏற்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

**9**) மேற்கண்ட 1-ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பிலான ஆவணங்களின் மூலமாக தாவா "B" அட்டவணை சொத்தை குறித்து வழக்கு வியாஜிய மூலம் இல்லை என்பதால் தாவா வழக்கில் "B" அட்டவணை சொத்து குறித்து 1-ம் எதிர்மனுதாரர்/வாதி எவ்வித பரிகாரமும் கேட்டிட இயலாது என்ற மனுதாரர்/1ம் பிரதிவாதி வாதம் ஏற்கும்படி உள்ளது. 16.10.2006-ம் தேதிய கிரைய ஆவணத்தில் சொத்து விபரத்திற்கு குறிப்பிட்ட நான்குமால் எல்லை விபரத்திற்கு முரண்பாடாக "B" அட்டவணை சொத்திற்கு 1ம் எதிர்மனுதாரர்/வாதி முழு உரிமையாளர் என கோரிக்கை வைக்க முயற்சிக்கிறார் என்ற மனுதாரர்/1-ம் பிரதிவாதி தரப்பு வாதத்தை பார்க்கையில் எ.ம.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிட்ட சொத்து விபர நான்குமால் எல்லைக்குள் தாவா "B" அட்டவணை சொத்து உள்ளடங்கவில்லை என்பதால் மேற்படி வாதமும் ஏற்கும்படி உள்ளது.

**10**) எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.4 வரையிலான ஆவணங்களில் கிழக்கு எல்லையாக சன்னாசி நிலம் என்ற விபரம் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி சன்னாசி என்பவர் மனுதாரர்/1-ம் பிரதிவாதியின் தாத்தா என்றும் தமிழ்நாடு அரசு சர்வே எண்கள்.62/3, 63/3, 64/1, 65/2 ல் 5 ஏக்கர் புஞ்சை நிலத்தை மேற்படி சன்னாசிக்கு 1974-ம் ஆண்டு ஒப்படைப்பு வழங்கியது என்றும் 30.12.1999-ம் ஆண்டு சன்னாசி இறந்துவிட்ட பிறகு சன்னாசியின் வாரிசுதாரர்கள் 25.10.2021-ல் மேற்சொன்ன 5 ஏக்கர் அசைன்மெண்ட் புஞ்சை நிலத்தை மனுதாரர்/1-ம் பிரதிவாதிக்கு ஆவண எண்.3442/2021 மூலம் இனாம் செட்டில்மெண்ட் செய்து கொடுத்துள்ளதாகவும், அதன் படி பட்டா எண்.651-ல் மனுதாரர்/1-ம் பிரதிவாதி பெயருக்கு பட்டா ஏற்பட்டுள்ளது

என்றும் மேற்படி சன்னாசி பெயரிலான சொத்து தாவா "A" அட்டவணை சொத்திற்கு கிழக்கே அமைந்துள்ள விபரம் எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.4 மூலமாக 1ம் எதிர்மனுதாரர்/ வாதிக்கு தெரியும். மேற்படி "B" அட்டவணை சொத்தானது 22.10.2021ம் தேதிய இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் மனுதாரர்/1ம் பிரதிவாதிக்கு பாத்தியம் ஏற்பட்டுள்ள விபரமும் 1ம் எதிர்மனுதாரர்/வாதிக்கு தெரியும். பதிவு ஆவணம் ஒன்றின் பதிவு தேதியே ஒருவருக்கு சொத்தின் பாத்தியம் உள்ளதற்கான விபரம் தெரிந்திட்ட நாளாகும். அந்த வகையில் தாவா வழக்கானது 16.10.2006-ம் தேதிய பதிவு கிரைய ஆவணம் ஏற்பட்ட போது தாவா வழக்கு தாக்கல் செய்திடுவதற்கான கால வரம்பு தொடங்கிவிடுகிறது என்பதால் தாவா வழக்கு கால வரம்பு சட்டம் 1963 ஷரத்து 58-ன் படி கால வரம்பு தோஷத்தால் பாதிப்பிற்கு உள்ளாகிறது என்ற சங்கதி குறித்து 1-ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் காலவரம்பு என்பது பொருண்மை மற்றும் சட்டம் இரண்டும் சேர்ந்த பிரச்சனை என்பதால் வழக்கு இறுதி விசாரணையின் போதே மேற்படி பிரச்சனை தீர்மானிக்க இயலும் என்றும் கால வரம்பு தோஷம் என்ற காரணத்திற்காக தாவா வழக்கினை நிராகரித்திட இயலாது என்று வாதம் புரியப்பட்டது.

11) மேற்படி சங்கதி குறித்து மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் மாண்பமை உச்சநீதிமன்ற முன்தீர்ப்பானது தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி முன் தீர்ப்பு சங்கதியினை பரிசீலனை செய்ததில் **CIVIL APPEAL No.14807 of 2024** என்ற வழக்கில்

> "At this juncture, we wish to observe that we are not unmindful of the position of law that limitation is a mixed question of fact and law and the question of rejecting the plaint on that score has to be decided after weighing the evidence on record. However, in cases like this, where it is glaring from the plaint averments that the suit is hopelessly barred by limitation, the Courts should not be hesitant in granting the relief and drive the parties back to the trial Court. We again place it on record that this is not a case where any forgery or fabrication is committed which had recently come to the knowledge of the

plaintiff. Rather, the plaintiff and his predecessors did not take any steps to assert their title and rights in time. The alleged cause of action is also found to be creation of fiction. However, the trial Court erroneously dismissed the application filed by the appellants under Order VII Rule 11 (d) of CPC. The High Court also erred in affirming the same, keeping the question of limitation open to be considered by the trial Court after considering the evidence along with other issues, without deciding the core issue on the basis of the averments made by the Respondent No.I in the plaint as mandated by Order VII Rule 11 (d) of CPC. The spirit and intention of Order VII Rule 11 (d) of CPC is only for the Courts to nip at its bud when any litigation ex facie appears to be a clear abuse of process. The Courts by being reluctant only cause more harm to the defendants by forcing them to undergo the ordeal of leading evidence. Therefore, we hold that the plaint is liable to be rejected at the threshold.

என கண்டுள்ளது. மேற்படி முன்தீர்ப்பு சங்கதியின் படி தாவா அசல் வழக்கில் குறிப்பிடும் காலவரம்பு தோஷ பிரச்சனை பொருண்மை மற்றும் சட்டம் சார்ந்த ஒன்றாக இல்லை என்பதும் அந்த வகையில் தாவா அசல் வழக்கு கால வரம்பு தோஷத்தால் பாதிப்புக்குள்ளாகிறது என்ற மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பு வாதம் ஏற்கும்படி உள்ளது.

12) மேலும் தாவா வழக்கு (b) படிகாரமானது Electricity Act 2003 பிரிவு 145-ன் படி சிவில் நீதிமன்ற அதிகார வரம்பு தடை உள்ளதால் தாவா வழக்கின் மேற்படி பரிகாரம் மேற்படி சட்டப்படி தடை ஏற்பட்டுள்ளது என மனுதாரர் குறிப்பிடும் காரணமான "No civil court shall have jurisdiction to entertain any suit or proceeding in respect of any matter which an assessing officer referred to in section 126 or an appellate authority referred to in section 127 or the adjudicating officer appointed under this Act is empowered by or under this Act to determine and no injunction shall be granted by any court or other authority in respect of

any action taken or to be taken in pursuance of any power conferred by or under this Act." என உள்ளதின்படி தாவா வழக்கின் (b) படிகாரம் இந்நீதிமன்றத்தில் கோரிட வாதிக்கு சட்டப்படியான தடை உள்ளது என்ற மனுதாரர் தரப்பு வாதம் ஏற்கும்படி உள்ளது.

**13**) மேலும் 1ம் எதிர்மனுதாரர்/வாதி குறிப்பிட்டுள்ள W.P.(MD)No.12608/2025-ல் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை பிறப்பித்த உத்தரவானது எ.ம.சா.ஆ.6-ல் காளையார்கோவில் காவல்நிலையத்தில் வாதி கொடுத்த புகாரினை close செய்து முடித்து வைத்ததற்கு எதிராக உரிய சட்ட வழியை பின்பற்றி மேல் நடவடிக்கை எடுத்திட Liberty கொடுக்கப்பட்டுள்ளதே தவிர தாவா வழக்கை 1, 2 பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்திட Liberty கொடுத்திடவில்லை என்ற மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பு வாதம் எ.ம.சா.ஆ.6 ஆவணத்தை பரிசீலனை செய்ததில் ஏற்கும்படி உள்ளது.

மேற்கண்ட காரணங்களினால் தாவா மனு அனுமதிக்கப்பட்டு O.S.No.121/2025 வழக்கின் பிராது கட்டளை VII விதி 11 (a) மற்றும் 11 (d) -ன் படி நிராகரித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் சரிபார்க்கப்பட்டு 2026-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 06-ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

PANDY R
Digitally signed by PANDY R
Date: 2026.04.06 16:51:56 +0530

சார்பு நீதிபதி

சிவகங்கை.

<u>மனுதாரர் தரப்பு சாட்சி</u> - இல்லை

<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் -</u> இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி</u> - இல்லை.

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் -</u>

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 - | 16.10.2006 - | ஆ.சுப்பிரமணியன் "A" ஷெடியூல் சொத்தில் ஒரு பகுதியை பொறுத்து கிருஷ்ணலீலாக்கு எழுதிக் கொடுத்த கிரையப்பத்திரம் - சார்பதிவாளர் நகல் |
| எ.ம.சா.ஆ.2 - | 21.05.2007 - | "A" ஷெடியூல் மற்றொரு பகுதியைப் பொறுத்து ஆ.சுப்பிரமணியன் ரா.கிருஷ்ணலீலாக்கு எழுதிக் கொடுத்த ரிஜிஸ்டர்டு கிரையப்பத்திரம் - சார்பதிவாளர் நகல் |
| எ.ம.சா.ஆ.3 - | 14.12.2020 - | கிருஷ்ணலீலா "A" ஷெடியூல் சொத்தை V.பாஸ்கரன் என்பவருக்கு எழுதிக்கொடுத்த ரிஜிஸ்டர்டு கிரையப்பத்திரம் - சார்பதிவாளர் நகல் |
| எ.ம.சா.ஆ.4 - | 09.09.2021 - | "A" ஷெடியூல் சொத்தினைப் பொறுத்து V.பாஸ்கரன் வாதிக்கு எழுதிக்கொடுத்த ரிஜிஸ்டர்டு கிரையப்பத்திரம் - சார்பதிவாளர் நகல் |
| எ.ம.சா.ஆ.5 - | 09.09.2021- | "A" ஷெடியூல் சொத்திற்கு வாதிக்கு வழங்கப்பட்ட பட்டா மாறுதல் உத்தரவு - இணையவழி நகல் |
| எ.ம.சா.ஆ.6 - | 29.04.2025 - | தாவா சொத்தினைப் பொறுத்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை W.P.No. 12608/2025-ல் பிறப்பித்த உத்தரவு - இணையவழி நகல் |
| எ.ம.சா.ஆ.7 - | 18.05.2024 - | 2-ம் பிரதிவாதி தாவா சொத்தில் உள்ள மின் இணைப்பு சம்மந்தமாக வாதிக்கு அனுப்பிய கடிதம் - அசல் |
| எ.ம.சா.ஆ.8 - | -- | தாவா சொத்து சம்பந்தமாக வாதி பெயரில் உள்ள சாகுபடி அடங்கல் மற்றும் தாவா சொத்தின் அமைப்பை காட்டக்கூடிய FMB ஸ்கெட்ச்- உண்மை நகல். |

PANDY R

Digitally signed by PANDY R
Date: 2026.04.06 16:51:39 +0530

சார்பு நீதிபதி

சிவகங்கை.

Subordinate Court, Sivagangai
I.A.No.3/2025 in
O.S.No.121/2025
**Draft/Fair/Order**
06.04.2026